DEPOSITION OF WITNESS

(Chapter X of Civil Procedure)

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM

OS. No. 52/2022

Deposition of witness for plaintiff/petitioner/defendants/respondents – PW1

| | | |
|---|---|---|
| Name | : | **சுந்தர்ராஜன்** |
| Father/Husband Name | : | நாகலிங்கம் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.02.2023

முதல் விசாரணை–

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். தாவா சொத்து பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்டக்கூடிய 31.03.2011 தேதியிட்ட இனாம்செட்டில்மென்ட் பத்திரம் நகல் வா.சா.ஆ.1. (அசலுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டது) பிரதிவாதி என்னிடம் 19.06.2018 ம் தேதி ரூ.12,00,000/–த்தை கடனாக பெற்றுக்கொண்டு தாவா சொத்தை அடமானம் வைத்து எனக்கு எழுதிக்கொடுத்த அடமானப் பத்திரம் அசல் வா.சா.ஆ.2. 22.04.2019 ம் தேதி பிரதிவாதி என்னிடம் மேற்கொண்டு ரூ.23,69,000/–த்தை கடனாக பெற்றுக்கொண்டு தாவா சொத்தை மேல்அடமானம் வைத்து எனக்கு எழுதிக்கொடுத்த Made Over அடமான பத்ரிரம் அசல் வா.சா.ஆ.3. 02.04.2022 ம் தேதி நான் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிவிப்பு நகல் வா.சா.ஆ.4. 05.04.2022 ம் தேதி அதனை பிரதிவாதி பெற்றதற்குரிய அஞ்சல் கணினி

நகல் வா.சா.ஆ.5. 19.05.2022 ம் தேதி நான் பிரதிவாதிக்கு அனுப்பிய மறுபதில் அறிவிப்பு, அஞ்சல் ரசீது மற்றும் அஞ்சலக ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.6. வில்லங்க சான்று கணினி நகல் வா.சா.ஆ.7. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டும்.

(குறுக்கு விசாரணைக்கு ஒத்திவைக்கப்படுகிறது)